பிபில பிரதேச சபை - 2023

----------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

----------------------------------------------------

பிபில பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (I) உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிபில பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 <u>முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை</u>

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே

விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமானதன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வின் விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்பட்டுள்ளதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 <u>ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை</u>

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | மீளாய்வாண்டில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 34,824,386 ஆன இரண்டு 02 நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 19,052,937 என ரூபா 15,771,449 குறைத்து காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,923,564 ஆன 03 நிர்மாணங்களின் பெறுமதி மூலதனம் ஆக்கப்பட்டிருக்கவில்லை | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டியாக ரூபா 110,394 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சரியாக நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண கடன் கொடுத்தோர் மீதி ரூபா 1,299,828 கூடுதலாக நிதி நிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்குவதாக | சரியான மீதிகள் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டில் திசெம்பர் | 2024 ஆம் ஆண்டின் | சபைக்கு சொந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | மாதத்தில் கிடைத்த ரூபா 127,829 ஆன நேரடி வைப்புக்கள் மீளாய்வாண்டு வருமானமாக இனங் காணப்படாமல் திரண்ட நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உரிய சீராக்கங்களை மேற்கொண்டு மீதிகளை சீராக்குவதாக | அனைத்து சொத்துக்களின் பெறுமதி நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (உ) | மீனாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 44,962,842 ஆன நிர்மாண கடன் கொடுத்தோர் மீதி ரூபா 37,761,419 இனங் காணப்படாமல் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது கடன்கொடுத்தோர் மீதியை சீராக்கம் செய்வதாக | கடன் கொடுத்தோர் இருப்பினை உறுதிப்படுத்தாமல் செலுத்த வேண்டிய கடன் மீதிகளை பதிவழித்தல் மேற்கொள்ளக் கூடாது |
| (ஊ) | மீளாய்வாண்டு ஒக்தோபர், நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக பெற வேண்டிய முத்திரை கட்டண பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகளை தயாரிக்கும் போது சீராக்கம் செய்வதாக | சபைக்கு சொந்தமான அனைத்து வருமானங்களும் இனங்ாண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 <u>கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை</u>

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ------------------------------------ | -------------------------------- | --------------- |
| ரூபா 683,450,303 கூட்டுப்பெறுமதியான 05 சொத்து விடயங்கள் மற்றும் பொறுப்பு விடயமொன்றுக்குரிய உரித்துறுதி, மதிப்பீட்டாளர்கள் அறிக்கை மற்றும் நாளது வரையாக்கப்பட்ட நிர்மாணக் கடன் கொடுத்தோர் பதிவேடு, கடன்பட்டோர் பதிவேடு, அட்டவணைகள் மற்றும் நிலுவையான ஏனைய வருமானப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியாதிருந்தது | உரிய ஆவணங்களை நாளது வரையாக்குமாறு விடயப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிகளை உறுதிப்படுத்து வதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.7 <u>இணக்கமின்மைகள்</u>

### 1.7.1 <u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான இணக்கமின்மைகள்</u>

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| ------------------------------ | ------------------------- | ------------------------ | ------------------ |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) 19(xii) ஆம் பிரிவு | 04 கடைகளை 2015 ஆம் ஆண்டு முதல் 2030 ஆம் ஆண்டு 15 ஆண்டு காலப்பகுதிக்காக் போது விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் இன்றி குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் 03 ஆண்டு காலப்பகுதிக்காக குத்தகையாளருடன் உடன்படிக்கை மேற்கொள்வதாக | நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கு விடய பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) 24(1) ஆம் பிரிவு | வீதிகள் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்ட 481 வீதிகளில் 454 வீதிகள் வர்த்தமானியில் வெளியிடப் பட்டிருக்கவில்லை. | GPS தொழில்நுட்பத்தின் மூலம் வீதிகள் தொடர்பான கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கணிப்பீட்டின் பின்னர் வீதிகளை வர்த்தமானியில் வெளியிடுவதாகவும் கப்பட்டுள்ளதாக | வீதிகள் பதிவேடுகள் நாளதுவரையாக வர்த்தமானியில் வெளியிட வேண்டும் |
| (iii) 154(1) ஆம் பிரிவு . | பிரதேச சபை எல்லைக்குள் காணி விற்பனை செய்யும் போது | ஒரே தடவையில் வரி செலுத்தப்படுவதில்லை லயெனவும் காணி | பிரதேச சபைச் சட்டத்தின் பிரகாரம் குறித்த வரி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விற்பனைத் தொகையில் 1 சதவீத தொகையினை பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய போதிலும் விற்பனை செய்யப்பட்ட 147 காணிகளில் இருந்து குறித்த நூற்றுக்கு ஒரு சதவீத வரித் தொகை பிரதேச சபையால் அறவிடப்பட்டிருக்கவில்லை | துண்டு விற்பனை செய்யப்படும் வகையில் செலுத்துவதாகவும் | அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணம் 571 | 02 ஆண்டுகளை மிகைத்த ரூபா 943,538 ஆன வைப்பு மீதிகள் தொடர்பான நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | வைப்புவ் செய்தவர்கள் எழுத்துமூம் அறிவிக்கப்பட்டுள்ளது டன் முன்வராத வைப்பாளர்களனி மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகாரசபை சட்டத்தின் 83(1) | 2016 முதல் 2020 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த 378 கட்டிட திட்டங்களில் 258 திட்டங்களைப் பரீட்சித்து இணக்க சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை | பிரதேச சபையில் ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தரே கடமை நிறைவேற்றுவதால் அவருக்கு கையளிக்கப்பட்டுள்ள ஏனைய கடமைகளுடன் இந்நடவடிக்கைகளை செய்வது சிரமமாக இருப்பதால் எதிர்காலத்தில் இந்நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபையினால் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்கின்ற நிர்மாணங்களை ஒழுங்குபடுத்த வேண்டும். |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2017 மார்ச் 16 ஆம் திகதிய 2010/23 ஆம் | சபையால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட 18 குழாய் கிணறுகளுக்காக | எதிர்காலத்தில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் | வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட பிரகாரம் பிரகாரம் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 01 மற்றும் 02 ஆம் பிரிவு | உரிய செயற்திட்ட அறிக்கை நீர் வளச் சபையின் மேற்பார்வைக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் நீர் வளச் சபையின் எழுத்து மூல அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை. | போது நீர் வளச் சபையின் பரிந்துரை மற்றும் ழிகாட்டலி கீழ் நிறைவேற்றுமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தி உள்ளதாக | எடுத்தல் வேண்டும் |

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,091,889 ஆக இருந்ததுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,142,593 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | -------- | | | | -------- | | | |
| **வருமான மூலம்** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பிடப்பட்ட வருமானம்** | **பட்டியலிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை** |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,007,866 | 10,916,460 | 7,759,257 | 3,157,203 | 12,785,798 | 9,668,114 | 2,441,188 | 7,226,926 |
| (ii) | வாடகை | 24,900,320 | 22,922,350 | 21,768,427 | 1,153,923 | 24,130,946 | 23,375,625 | 16,898,884 | 6,476,740 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 3,793,300 | 1,589,875 | 1,589,875 | - | 2,040,400 | 1,737,350 | 1,457,900 | 279,450 |
| (iv) | ஏனைய வருமானம் | 11,696,500 | 17,153,538 | 6,827,752 | 10,325,786 | 3,392,500 | 25,434,313 | 13,563,160 | 11,871,153 |
| | | 54,397,986 | 52,582,223 | 37,945,311 | 14,636,912 | 42,349,644 | 60,215,402 | 34,361,132 | 25,854,269 |

**2.2.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரிப்பின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் பட்டியலிடப் பட்ட ரூபா 3,188,748 ஆன வீத வரி வருமானத்தில் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,664,969 அதாவது 52 சதவீதம் அளவில் அறவிடப்பட்டு இருக்கவில்லை | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | பட்டியலிடப்பட்ட வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 6,027,300 ஆன நிலுவை வீத வரி வருமானத்தில் ரூபா 4,713,880 அதாவது 78 சதவீதம் அளவில் மீளாயவாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிலுவைத் தொகையை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட வேண்டும் |
| (இ) | 14 ஆதனங்களை குத்தகைக்கு வழங்கியமைக்காக 2007 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,164,795 ஆன. குத்தகை | 2007 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நிலுவையை அறவிடு வதற்கு வழக்கு தொடரப்பட்டுள்ளதா | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | கவும் கொவிட் காரணமாக வரி நிவாரணம் பெற்றுக் கொள்வதற்காக ஆளுநரின் அங்கீகார த்திற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாக | |
| | வாடகை | | |
| | 138 கடைகளிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டியதாக காணப்படும் ரூபா 1,210,767 ,ஆன கடை வாடகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ரூபா 1,117,767 தொற்று நிலைமை அடிப்படையில் அறவிடுவதற்கு முடியாமை காரணமாக பதிவழிப்பதற்காக பிரதான அமைச்சரின் அங்கீகாரத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய நிலுவை வாடகை அறவிடுவதற்கு உரிய வழக்கு தொடரப்பட்டுள்ளதாக | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். |
| | ஏனைய வருமானம் | | |
| (அ) | நீர் செயற்திட்டத்தின் 499 நீர் பாவனையாளர்களிடமிருந்து 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 1,554,849 ஆன நிலுவை நீர் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை நீர் கட்டணத்தை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக . | நிலுவை நீர் கட்டணத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும் |
| (ஆ) | சபை அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 11 நிலையான விளம்பர பதாதைகளிலிருந்து 2020 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரை | நிலுவையை அறவிடுவதற்கு வருமான பரிசோதகருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுட ன் குறித்த வியாபார | குறித்த காலப் பகுதியில் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | |
|---|---|---|
| அறவிடப் வேண்டிய ரூபா 191,250 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் | |
| (இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 71,898 மற்றும் முத்திரைக் கட்டணங்கள் ரூபா 12,001,830 பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை | இத்தொகையை விரைவில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் | நிலுவை வருமானத்தை விரைவில் அறவிடப்படல் வேண்டும் |

## 3. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 3.1 <u>சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேறறுதல்</u>

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (அ) சபையால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்ட 18 குழாய் கிணறுகளின் நீர் குடிப்பதற்கு பொருத்தமானதா என்பது தொடர்பாக நீர் மாதிரி பரிசோதனையொன்று செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நீர் மாதிரியை பரிசோதனை செய்யுமாறு உரிய உத்தியோகத்தர் களுக்கு அறிவுறுத்தி உள்ளதாக | குடி நீர் தொடர்பாக தரப் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) நாயக்கந்துர நாயக்கந்துர நீர் சுத்திகரிப்பு ரூபா 35,380,858 செலவிடப்பட்டு 2017 ஆம் ஆண்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2018 ஜூன் மாதத்தின் பின்னர் நீர் சுத்திகரிக்கப்படாமல் | எதிர்வரும் சில மாதங்களுக்குள் நீர் சுத்திகரிக்கப்பட்டு சுத்தமான நீரை வழங்குவதற்கு நடவடிக்கை | குடிநீர் தொடர்பான தரப் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | பாவணையாளர்களுக்கு வழங்கல் இடம் பெற்றிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே நாயக்கந்துர மற்றும் ரத்துபஸ்கெட்டிய நீர் சுத்திகரிப்பு செயற்திட்டங்களின் நீரின் மாதிரி பரீட்சிக்கப்படாமல் மக்களுக்காக நீர் பகிர்ந்து அளிக்கப்பட்டிருந்தது. | எடுப்பதாக | |
| (இ) | 2023 ஆம் ஆண்டுக்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | மொத்தமாக கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்படாத இருந்தலுடன் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டில் புதிய அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்ள வேண்டிய 12 நிர்மாணங்கள் இனங் காணப்பட்டுள்ளதாக | அதிகார பிரதேசத்தின் கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் |
| (ஈ) | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதி பத்திரங்களின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த 09 அனுமதிப்பத்திரங்களை புதுப்பபிதற்கும் மீளாய்வாண்டில் இனங்காணப்பட்ட 12 கைத்தொழில்களுக்காக அனுமதி பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக ரூபா 84,000 ஆன வருமானம் சபை நிதியத்திற்கு இழக்கப்பட்டு இருந்தது | 2024 ஆம் ஆண்டின் போது சுற்றாடல் அனுமதி பத்திரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு வருமான உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ள தாக | அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்படும் நிர்மாண நிறுவனங்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் |

**3.2 <u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ------------------------------------------------ | -------------------------------------- | -------------------- |

| | | | |
|---|---|---|---|
| (அ) | மொனராகல காணி பதிவாளர் அலுவலகத்திலிருந்து அனுப்பப்பட்ட முத்திரை கட்டணங்கள் அட்டவணையின் பிரகாரம் 2022 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்காக பெறவேண்டிய ரூபா 3,176,600 தொகையில் ரூபா 2,146,222 தொகை கிடைத்திருந்ததுடன் எஞ்சிய தொகையை அறவிடாமல் திரண்ட நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. | பெறவேண்டிய ரூபா 1,030,378 தொகை தொடர்பாக விசாரித்து அத்தொகையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான வருமானம் அறவிடப்பட வேண்டும் |
| (ஆ) | 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வில் பிரதேச சபைக்குரிய உடைக்கும் சம்மட்டி குழாய்கள், மண்வெட்டிகள், முள்ளுகள் உட்பட 11 வகைக்குரிய 14 பொருட்கள் இல்லாத காணாமல் போனதாக இனங் காணப்பட்டிருந்த போதும் இறுதி வரையிலும் இது தொடர்பாக உரிய தரப்பினர் இனங் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இப் பொருட்களில் ஒரு பகுதி திருடர்களால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் ஏனைய பொருட்களுக்காக பொறுப்பான தரப்பினர்களிடமிருந்து குறித்த பெறுமதியை அறவிடுமாறு விடய பொறுப்பு உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தி உள்ளதாக | நட்டத்தை பொறுப்பான தரப்பின இடமிருந்து அறவிட வேண்டும். |
| (இ) | வெற்றிடம் ஒன்று இல்லாமல் இருக்கையில் அங்கீகாரம் ஒன்று இல்லாமல் ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் ஜனவரி பெப்ரவரி மாதங்களுக்காக ரூபா 89,600 ஆன படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டு இருந்தது.∴. | இப்படிகளை மீண்டும் செலுத்துமாறு குறித்த உத்தியோகத்தரிற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூராட்சி மன்ற ஆணையாளிடமிருந்து ஆலோசணைகளை வழங்குமாறு வேண்டுகோள் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக | படிகள் கொடுப்பனவு முறையான அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்கு சொந்தமான 84 கடைகளுக்குரிய குத்தகைய உடன்படிக்கை முடிவடையும் காலம் குறிப்பிடப்படாத இருந்ததுடன் அதில் 23 கடைகளை குத்தகைக்கு வழங்கி 20 ஆண்டுகளுக்கு மேற்பட்டிருந்தது | பழைய உடன்படிக்கைகளிலும் குத்தகை காலம் உள்ளடக்கப்படாமல் இருந்ததால் புதிய உடன்படிக்கைகளிலும் குத்தகைக் காலத்தை உள்ளடக்குவதற்கு குத்தகையாளர்கள் இணங்காமை காரணமாக காலம் குறிப்பிடப்பட்டு உடன்படிக்கை செய்வதற்கு முடியாமல் உள்ளதாக | குத்தகை உடன்படிக்கை முறையாக பேணி செல்லப்பட வேண்டும் |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த 04 கிணறுகள் பயன்பாட்டுக்கு எடுக்காமல் வினைவற்று காணப்பட்டன. | குழாய் கிணறுகளை நிர்மாணிப்பதற்காக வேண்டுகோள் விடுத்த நபர்களை உரிய குழாய் கிணறுகளை பயன்பாட்டுக்கு எடுக்குமாறு ஆலோசனை வழங்கியுள்ளதாக | பொது நிதியத்தை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற செயற்திட்டங்கள் தொடர்பான பின் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) பிரதேச சபைக்கு சொந்தமான நீர் பவுசர் 2020 ஆகஸ்ட் மாதத்திலிருந்தும் கை உழவு இயந்திரம் 2008 ஆம் ஆண்டிலிருந்தும் பயன்பாட்டில் இருந்து ஓரமாக்கப்பட்டிருந்தது | இவ்வாகனங்கள் விரைவில் திருத்தி அமைத்து வருமானத்தை ஈட்டுவதற்கு ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக | வாகனங்களில் செய்ய வேண்டிய திருத்தங்களை உரிய காலங்களில் மேற்கொள்ள வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பயன்படுத்தப்படுகின்ற 03 வாகனங்களின் சட்ட ரீதியான உரித்து சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாகனங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | சபைக்கு சொந்தமான வாகனங்களின் சட்டபூர்வமான உரித்து கையேடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நன்கொடையாக கிடைத்த கணினி இயந்திரத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படவில்லை | 2024 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது ஆரம்ப மீதிகளை சரி செய்வதாக | சபைக்கு கிடைக்கும் அனைத்து சொத்துக்களின் கிரயத்தையும் இனங் கண்டு கணக்கீடு செய்ய வேண்டும் |
| (உ) | பிரதேச சபைக்கு உரிய உடுப்புல ஓய்வூதிய மண்ட கட்டிடம் மற்றும் 46 மயான பூமிகள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை | இச்சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டதன் பின்னர் கணக்கீடு செய்யப்படும் | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களின் பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும் |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் ஆண்டின் போது பெறுகைச் செயற்பாட்டில் இருந்து விலகி ரூபா 1,445,400 ஆன செலவில் 06 குழாய் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டு இருந்ததுடன் 2022 ஆம் ஆண்டின் மதிப்பீடு தயாரிக்கப்படாமல் 18 கிணறுகளை நிர்மாணிப்பதற்காக விலை கோரப்பட்டு இருந்தது | குழாய் கிணறு நிர்மாணத்தின் போது நீரை பெற்றுக் கொள்ளும் வரை அகழ்வு இடம்பெறுவதுடன் அகழ்வினை மேற்கொள்ள முன்னர் மதிப்பீடு தயாரிப்பது சிரரமானதென | உரிய வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் 07 பதவிகளுக்குரிய 13 ஊழியர்கள் பற்றாக்குறையாகவும் 10 ஊழியர்கள் மிகையாகவும் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதவியணி வெற்றிடங்கள் மற்றும் மிகை தொடர்பாக உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு எழுத்துமூலம் அறிவிப்பதாக | பதவியணி வெற்றிடங்களின் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் மிகை பதவியணியினரை அங்கீகரித்தக் கொள்ள வேண்டும். |
| (ஆ) 2018 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 03 ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ஊழியர் கடன் ரூபா 201,543 தொகை 2024 பெப்ரவரி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | மேலும் நிலுவையாக காணப்படும் நிலுவை மீதிகளை விரைவில் அறவீடு செய்வதாக | ஊழியர் கடன் மீதிகளை விரைவில் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வான்டில் பிரதேச சபையால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினஒப்பிடும் போது 08 வருமான விடயங்களில் 02 சதவீதம் முதல் 58 சதவீதம் வரையிலும் 07 செலவின விடயங்களில் 1 சதவீதம் முதல் 412 சதவீதம் வரை விலகல்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை | எதிர்காலத்தில் முறையாக பாதீடொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக | வருடாந்த மதிப்பீடு நடைமுறைச்சாத்தியமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் அந்த இலக்குகள் நிறைவேற்றப்பட வேண்டும் |

**4.2 சுற்றாடல் சிக்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சபையால் கலி சேவை மூலம் அகற்றப்படுகின்ற மலக் கழிவுப் பொருட்கள் புவக்பலய கழிவுப்பொருள் தொகுதி அமைந்துள்ள காணியில் திறந்த காணுக்கு வெளியேற்றப்படுவதால் அக்காணிக்கு அண்மித்து அமைந்துள்ள குடா தொழா வீதியுடன் சேர்ந்து மாதுரு ஓயாவில் கலப்பது அவதானிக்கப்பட்டது. | மலக் கழிவுகளை வெளியேற்றும் முறைமையை அமைப்பதற்கான செயற்திட்ட அறிக்கை உள்ளுராட்சி மன்ற ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக | மலக் கழிவுகளை வெளியேற்றுதல் முறைப்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) சபையினால் கலி வெளியேற்று வதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளப்படாதிருந்த துடன் மலக் கழிவுகளை முறையாக வெளியேற்றும் நடைமுறையொன்று சபையிடம் காணப்படவில்லை. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுபடபதாக | மலக் கழிவுகளை முறையாக வெளியேற்ற வேண்டியதுடன் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |